தமிழ்நாடு அரசு

# கால்நடை பராமரிப்புத் துறை

**கால்நடை பராமரிப்புத்துறையில் கால்நடை ஆய்வாளர் நிலை 2 பதவிக்கான பயிற்சிக்கு தகுதியுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

| வ. எண் | பதவியின் பெயர் | வயது வரம்பு | | | | | | | மொத்த காலி பணியிட எண்ணிக்கை | கல்வி மற்றும் பிற தகுதிகள் | தற்போது நிர்ணயிக்கப்படும் அதிகபட்ச வயது |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | SCA | SC | ST | MBC | BC | BCM | GT | | | |
| 1 | கால்நடை ஆய்வாளர் நிலை II பதவிக்கான பயிற்சி | 35 | 35 | 35 | 32 | 32 | 32 | 30 | 583 | 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | SCA, SC, ST, MBC, BC, BCM பட்டப்படிப்பு தேர்வு பெற்றிருப்பின் அதிகபட்ச வயது 46. GT – வயது வரம்பில் மாற்றமில்லை. |

1. 11 மாத கால கால்நடை ஆய்வாளர் பயிற்சி முடித்த பின் தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு கால்நடை ஆய்வாளர் நிலை 2–ஆக பணி நியமனம் வழங்கப்படும். பயிற்சி காலத்தில் ஊதியம் / உதவித் தொகை வழங்கபட மாட்டாது.
2. காலிப்பணியிடங்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்கள் ஆகியோரின் விகிதாச்சாரத்தை உள்ளடக்கியதாகும்.
3. கால்நடை ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) 32 ஆகும். பொதுப் பிரிவினருக்கு 30 ஆகும். (01.07.2019 அன்றுள்ளபடி)
4. கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கான விண்ணப்பத்தினை www.tn.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. விண்ணப்பத்துடன் தேர்வு கட்டணம் ரூ.100/–க்கான வங்கி வரைவோலையினை இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–35 என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியிலிருந்து எடுத்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிட வேண்டும் (பணமாக பெற்றுக் கொள்ள பட மாட்டாது.
6. மாற்றுத் திறனாளிகள், விதவைகள் / ஆதரவற்ற விதவைகள், SC, ST, திருநங்கைகள் ஆகியோருக்கு விண்ணப்ப கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
7. விண்ணப்பத்தில் அனைத்து விவரங்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முழுமையான விவரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. குற்ற வழக்குகள், நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அரசியலில் பங்கேற்று அதற்கான தண்டனை பெற்றவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 20.12.2019 அன்று மாலை 5.45 மணிக்குள் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
10. ஏற்கனவே பணிபுரிந்த அரசுத் துறை / அரசு அலுவலத்திடமிருந்து குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பணிநீக்கம் செய்யப்பட்டிருப்பின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
11. மேற்கண்ட பதவிக்கு எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணலில் பெறும் மதிப்பெண்களின் படி, இன சுழற்சி அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வினை எந்த நிலையிலும் நிறுத்துவதற்கும் / ரத்து செய்வதற்கும் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.

இயக்குநர்

**செமதொஇ/1449/வரைகலை/2019**

கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள்